செ.வெ.எண்: 47 நாள்: 23.04.2020

## கரூர் மாவட்டம்

## 1லட்சம் குடும்பங்களுக்கு உணவுக்கான பொருட்களை வழங்கும் பணியின் ஒரு பகுதியாக கரூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்கான உணவுப்பொருட்கள் கொண்டு செல்லும் வாகனங்களை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் வழியனுப்பிவைத்தார்

அதன் விபரம் வருமாறு:

1லட்சம் குடும்பங்களுக்கு உணவுக்கான பொருட்களை வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதியாக கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதி மக்களுக்கான உணவுப்பொருட்களை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (23.04.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் முன்னிலையில் பிரேம் மஹாலில் இருந்து வழியனுப்பி வைத்தார்கள்.

கொரோனா தொற்று பரவலை தடுக்கும் வகையில், 144 தடை உத்தரவு அமுலில் உள்ளதால் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், தமிழக அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் எடுத்துவருகின்றது.

இந்நிலையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தனது சொந்த செலவில் கரூர் மாவட்டத்தில் 1 லட்சம் குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, 2 கிலோ கோதுமை, 1 கிலோ பருப்பு, அரை லிட்டர் சமையல் எண்ணெய், அரைக்கிலோ சர்க்கரை, 1கிலோ உப்பு, 100 கிராம் மஞ்சள் பொடி உள்ளிட்ட சுமார் 10 கிலோ எடையுள்ள பொருட்கள் வழங்கும் பணியினை 19.4.2020 அன்று துவக்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீடு, வீடாகச்சென்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் சார்பில் உணவுக்கான பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. பல இடங்களில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களே நேரடியாக சென்று பொதுமக்களுக்கு உணவுக்கான பொருட்களை வழங்கி வருகின்றார்கள்.

அந்த வகையில் கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்ட பகுதி மக்களுக்கு உணவுப்பொருட்கள் கொண்டு செல்லும் வகையில் பிரேம் மஹாலில் இருந்து சுமார் 35 வாகனங்களில் ஒரு வாகனத்திற்கு 150 பைகள் வீதம், மொத்தம் 5,250 பைகளில் உணவுக்கான பொருட்களை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து மண்மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு உணவுக்கான பொருட்களை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்கள்.

இதுவரை சுமார் 43,430 குடும்பங்களுக்கு அரிசி மற்றும் மளிகைப்பொருட்களுடன் கூடிய பைகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.வ.சந்தியா, நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.திருவிக, கரூர் ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் திரு.தங்கராஜ், கரூர் வட்டாட்சியர் திருமதி.அமுதா உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.